**செய்தி வெளியீடு** **நாள்: 13.03.2025**

**சென்னை தலைமைச் செயலகத்தில்**
**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில்**
**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2025 - 2026 ஆம் ஆண்டு**
**சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்படவுள்ள புதிய அறிவிப்புகள் குறித்த**
**ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (13.3.2025) சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள தொழில் துறை கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் 2025-2026ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்படவுள்ள புதிய அறிவிப்புகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் டாக்டர் சு.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.அ.பாலசுப்ரமணியன், திரு.ந.ரவிக்குமார், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.மா.பாலமுருகன், தலைமை நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.